இலங்கை திறந்த பல்கலைக் கழகம்
தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் சான்றிதல் கற்கை நெறி
இறுதிப் பரீட்சை – 2007/2008
MCC 1201 - தொழிலுரிமைத்துவம்
காலம்: இரண்டு (2) மணித்தியாலம்

திகதி : 13.01.2008 நேரம்: 10.00 மு.ப – 12.00 பி.ப.

எவையேனும் நான்கு (4) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக. எல்லா விடைகளும் சம புள்ளிகளைக் கொண்டுள்ளன.

01. நீர் தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கை நெறியினைப் பயின்றுள்ளீரென அறிந்துள்ள உமது நண்பரொருவர், கொழும்பிற்கு வெளியே 20 கி.மீ தொலைவிலுள்ள நகரமொன்றில் வணிக முயற்சியொன்றினை அமைக்க விரும்புகின்றார். அவர் கூறியபடி தெரிவு செய்யப்பட்ட அந் நகரில், கிருமிநாசினிகள், விரைவு உணவுகள், தென்னையுடன் தொடர்புடைய உற்பத்திகள் (தேங்காய், சர்க்கரை, காடிநீர்) ஆகியவற்றிக்கான விற்பனை நிலையங்களிலிருந்து ஒன்றினைத் தெரிவு செய்யுமாறு உமது நண்பர் உம்மை வேண்டின், எவ்வாறு அதனைத் தெரிவு செய்வீர் என்பதனை விளக்குக.

02. நம்பிக்கையுள்ள மனப்பாங்கும், விடாமுயற்சியும் வெற்றிகரமான தொழிலுரிமையாளர்களின் அம்சங்களாகும். தொழிலுரிமையாளர்களிடையே காணப்படும் வேறு நான்கு அம்சங்களையும் குறிப்பிட்ட உதாரணங்களுடன் ஆராய்க.

03. (i) “வெற்றியடையும் தொழிலுரிமையாளர் குறிக்கோளொன்றினைக் (vision) கொண்டிருத்தல் வேண்டும்”. குறிக்கோள் என்னும் பதம் மூலம் எதனை விளங்குகின்றீரென விளக்குக.

ஒரு நிறுவனத்தின் பெயரினைக் குறிப்பிட்டு அதன் குறிக்கோளினை விபரிக்குக.

(ii) “குறிக்கோளொன்றிருப்பின், இலட்சிய நோக்கினை (mission) அடைதல் இலகுவாகும்”. இக் கூற்றினை மதிப்பிடுக.

04. “ஏதாவது இடர் அபாயத்தினை துணிதலும், முயற்சியொன்றினை எடுத்தலும் நோக்குகளையடைய தொழிலுரிமையாளர்கள் கொண்டிருக்கும் பண்புகளாகும்.” இக் கூற்றினையிட்டு உமது அபிப்பிராயம் யாது? இதனையிட்டு குறிப்பிட்ட உதாரணங்களைத் தருக.

05. பின் வருபனவற்றிக்குச் சிறு குறிப்பெழுதுக.
(i) வணிக நிறுவனங்களில் நோக்கங்களை உருவாக்குதல்
(ii) சாதனைக்குரிய ஆற்றல்
(iii) SWOT ஆய்வு.

(பதிப்புரிமையுடையது)